IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF ARAKKONAM

OS. 55/2024

Deposition of Witness : PW 1

Name : தமோதரப்பிள்ளை (வயது – 84)

Father's Name /W/o : த/பெ சுப்பிரமணிய பிள்ளை

Religion : இந்து

Caste : –

Calling : –

Address : பெரும்புலிப்பாக்கம்

Solemnly affirmation accordance with the provision of Act X 1873 on the day of 24.07.2025.

## குறுக்கு விசாரணை

1. நான் தற்போது எங்கு குடியிருக்கிறேன் என்றால் பெரும்புலிப்பாக்கம் மேட்டுத்தெரு. நான் என்ன வேலை செய்தேன் என்றால் பயிர் வேலை தற்போது ஓய்வில் இருக்கிறேன். நான் என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் பிரதிவாதி தடை செய்கிறார் அதனால் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்து ஆதியில் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் 30 வருடமாக என் அனுபவத்தில் உள்ளது அரசாங்கம் எனக்கு பட்டா அளித்தார்கள். தாவா சொத்தில் அளவுகள் என்ன வென்றால் தெரியாது.

2. பட்டா எண் என்னவென்றால் தெரியாது. பட்டா அடிப்டையில் நான் தாவா சொத்துககு பூர்ண உரிமையாளர் என்று தெரிவித்துள்ளது தவறு என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு பட்டா தவிர்த்து பத்திரம் உள்ளதா என்றால் அரசாங்கம் கொடுத்த பட்டாதான் உள்ளது. ஏற்கனவே அரக்கோணம் சார்பு நீதிமன்றத்தில் வழக்கு எண்.117/2022 தாக்கல் செய்துள்ளேனா என்றால் சரிதான்.

3. மேற்படி வழக்கில் பிரதிவாதி தரப்பினராக இருந்தால் என்றால் இல்லை. நாராயணசாமி சித்தப்பா ராமாபிள்ளை தெரியுமா என்றால் என் அத்தை மகன். ராமாபிள்ளை தற்போது தாவா சொத்து உள்ள ஊரில் இருக்கிறாரா என்றால் இல்லை. நான் தாவா சொத்தில் வீடு கட்ட பஞ்சாயத்து வாரியத்திடம் அனுமதி வாங்கினேனா என்றால் வாங்கினேன். அதற்கான ஆவணம் இந்நீதிமனற்த்தில் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. பிரதிவாதி தடை செய்வதற்கு நான் காவல் நிலையத்தில் புகார் அளித்தேனா அல்லது சட்ட அறிவிப்பு அனுப்பினேனா என்றால் இல்லை.

4. பிரதிவாதி எந்த ஒரு இடையூறு செய்யாதால் தான் நான் புகார் அளிக்கவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி எங்கு குடியிருக்கிறார் என்றால் வழக்கு சொத்திற்கு பக்கத்தில் குடியிருக்கிறார். பிரதிவாதி குடியிருக்கும் வீட்டில் சர்வே எண்.363/7 இல் நான் எந்த பரிகாரமும் கோரவில்லை என்றால் சரிதான். எனக்கு தாவா சொத்திற்கு எந்த உரிமை முல ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்பதால் தாவா சொத்தில் எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு வீட்டு வரி நான் கட்டவில்லை என்றால் தாவா சொத்து காலியிடமாக உள்ளது அதனால் வீட்டு வரி செலுத்தவில்லை. என் மகன் பெயர் என்னவென்றால் எத்திராஜ் அவர் என்ன வேலை செய்கிறார் என்றால் அரசாங்க வேலையிருக்கிறார் அதில் என்ன பதவி என்ன துணை வட்டாட்சியர் ஆக பணிபுரிந்து வருகிறார்.

5. பட்டா எவ்வாறு எனக்கு வழங்கப்பட்டது என்றால் அனுபவத்தில் அடிப்படையில் வழங்கப்பட்டது. நான் பட்டா வேண்டுமென்று மனு ஏதேனும் அளித்தேனா என்றால் இல்லை. என் அனுபவத்தை வைத்து அரசாங்கம் எனக்கு பட்டா அளித்தார்கள். நான் தாவா சொத்தில் அனுபவத்தில் இல்லாமல் எனக்கு பட்டா வழங்கப்பட்டது அதனால் மேற்படி பட்டா எனக்கு செல்லத்தக்கது என்றால் சரியல்ல.

6. வா.சா.ஆ – 1 இல் வடக்கு தெற்கு அளவு என்றால் 4 மீட்டர். கிழக்கு மேற்கு என்ன அளவு என்றால் ஞாபகமில்லை. வா.சா.ஆ – 2 இல் 4 எல்லைகள் அளவு என்னவென்றால் தெரியாது. பட்டா பெற்ற பிறகு சர்வயேர் மூலம் நான் தாவா சொத்தை அளந்தேனா என்றால் அளந்து கல் போட்டுள்ளார்கள். மேற்படி அளந்ததற்கு சர்வேயருக்கு அளித்த ரசீது இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

7. எனக்கு வழக்கு சொத்துகளின் சங்கதிகள் எதுவும் தெரியாமல் முன்னுக்கு முரணாக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் தெரிவித்துள்ள சங்கதிகளுக்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. சாந்தி என்பவர் ஊரில் இருந்து வெளியே சென்ற நேரத்தில் சார்பு நீதிமன்றத்தில் ஒருதலைபட்சமாக தீர்ப்பு வாங்கினேனா என்றால் அவர்கள் தான் அவர்கள் ஒருதலைபட்சமாக ஆக்கப்பட்டனர்.

8. நான் தவறான வழக்கு தாக்கல் செய்தள்ளேன் என்றால் சரியல்ல. நான் எந்த அனுபவத்தில் இல்லாத காரணத்தால் நான் பிரதிவாதியின் மீது வழக்கு தாக்கல் செய்து ஆவணங்களை உருவாக்கிறேன் என்றால் சரியல்ல. சர்வே எண்.363/7 பட்டா எண்.270 பழைய கதவு எண்.5 புதிய எண்.9 இல் நான் எந்த வித பரிகாரமும் கோரவில்லை என்றால் சரிதான். எனவே எந்த ஒரு ஆதாரமும் இல்லாத காரணத்தினால் இந்த வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.